# மன்னாரில் புலிகள் அதிரடி; 4 இராணுவம் பலி

(மன்னார்)
மன்னாரில் தமிழீழ விடுத லைப் புலிகள் நடத்திய 5 நிமி அதிரடித் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப பட்டனர்.
மன்னார் அடம்பன் பாலக் கொடி பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது பகல்
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 30 இதழ் 248
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 16 — 10 — 1992

## 3½ லட்சம் கையெழுத்துடன் ஐ. நாவுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)
ஸ்ரீலங்கா இராணுவத்திட மிருந்து இலங்கைத் தமிழ்மக் களை காப்பாற்றுமாறு இலங் கைத் தமிழ் பக்கலுக்கான சர்வதேச அமைப்பு ஐ நா. வுக்கும் சர்வதேச மன்னிப்புச்
(4-ம் பக்கம் பார்க்க)

## திறைசேரி செலவுக்கு நிதியில்லாமல் திணறல்

(திருநெல்வேலி)
இலங்கை திறைசேரியின் வருடாந்த ஆரம்பநடைமுறை செலவினத்திற்கு 250 கோடி ரூபா தேவைப்படுவதாகதிறை
(4ம் பக்கம் பார்க்க)

# பொலநறுவையில் இனம்தெரியாதோர் தாக்குதல் 4 கிராமங்களில் 148 பேர் பலி; 40க்கு அதிகமானோர் படுகாயம்

(பொலநறுவை)
**பொலநறுவை பகுதியில் நான்கு எல்லைக்கிராமங்கள் மீது இனம் தெரியாத கோஷ்டியினர் நேற்று அதிகாலை நடாத்திய தாக்குதலில் 148 கிராமவாசிகள் கொல்லப்பட்டனர்; 40 பேர் வரையில் படுகாயமடைந்தனர். இச்சம்பவத்தில் 80 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன**

மேலும் மட்டக்களப்பு - பொலநறுவை எல்லையிலுள்ள நான்கு கிராமங்களினுள் நேற்று அதிகாலை 4-45 மணிககு ஆயுதக் கோஷ்டி ஒன்று நுழைந்தது.

கிராமத்தவர்கள்மீது இக் கோஷ்டி நடாத்திய தாக்கு தலில் 148 பேர் உயிரிழந்த தாகவும் 40 பேர் காய மடைந்ததாகவும் மேலும் பலர் உயிரிழக்கும் அபாயமிருப்பதாகவும் கூட் டுப்படைத் தலைமையக பேச் சாளர் கேர்ணல் சரத் முன சிங்க தெரிவித்தார்.

இச்சம்பவம் பற்றியதகவல் கள் கிடைத்ததும் படையினர் இப்பகுதிக்கு விரைந்ததாக வும் இவர்களுக்கு உதவியாக ஹெலிகொப்டர்களும் தேடு தல்களை மேற்கொண்டதாக வும், பெருமளவு படையினர் இப்பகுதியில் தேடுதல்களை மேற் கொண்டிருப்பதாகவும்
(4-ம் பக்கம் பார்க்க)

## நவம்பர் 6-ல் புதிய வரவு-செலவுதிட்டம்

(கொழும்பு)
1993ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் நவம்பர் மாதாம் 6ம் திகதி பி. ப. 2 மணிக்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.
பிரதமரும் நிதியமைச்சரு
(4ம் பக்கம் பார்க்க)

## வெளிநாடுகளில் கல்வி பயில யாழ். மாணவருக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்கள் பறிபோகின்றன

(கொழும்பு)
வெளிநாடுகளில் உள்ள கல் லூரிகளில் யாழ்ப்பாணத்து தமிழ் மாணவர்களுக்கு உயர் கல்வி கற்பதற்காக கிடைக் கும் சந்தர்ப்பங்களை இலங் கையில் உள்ள அந்த நாடு களின் உயர் ஸ்தானிகர் காரி யாலய அதிகாரிகள் முற்றாக தடுத்து வருவதாக கொழும் புச் செய்திகள் தெரிவிக்கின் றன.

குறிப்பாக இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் யாழ்ப்பாணத்து தமிழ் மாண வர்களுக்கு உயர்கல்வி கற்ப தற்காக அங்குள்ள கல்லூரி களில் முறையான அனுமதி கிடைத்தபோதிலும் அந்த நாடுகளுக்குச் செல்வதற்கு இலங்கையில் உள்ள அந்த நாடுகளின் உயர் ஸ்தானிகர் காரியாலயங்கள் அனுமதி (விஸா) அளிக்க மறுத்து வரு
(4ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு ஆலோசனை; 3 சபைகள் ஒரு முதல்வர்

(கொழும்பு)
அதிகாரம கொண்ட நிறைவேற்று அமைச்சர்கள் தலைமையில் வடக்கு-கிழக்கு இரு மாகாண சபைகள், இரண்டும் இணைந்து முத லமைச்சர் ஒருவரின்கீழ் பிராந் திய சபை ஒன்றை கொண்டி ருக்கக்கூடிய யோசனை சமர்ப் பிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்னைக்கு இணக்க மான தீர்வொன்றை காணு முகமாக தமிழ் கட்சிகளின் பரிசீலனைக்காக இப்படியான ஆவணமொன்றை நாடாளு மன்ற தெரிவுக்குழு நேற்று முன்தினம்சமர்ப்பித்தது. (கே)

## அரசியல் தீர்வு காணுமாறு இலங்கைக்கு வலியுறுத்து

(லண்டன்)
இலங்கையின் இனப்பிரச் னைக்கு ஸ்ரீலங்கா அரசு ஒரு அரசியல் தீர்வைக் காண வேண்டுமென வெளிநாட்டு அமைப்புகள் மூலம் ஓர் அழுத் தம் தற்போது கொடுக்கப் பட்டுவருகிறது.

ஆனால் இந்த அழுத்தம் கூட திரை மறைவிலிருந்தேகொடுக் சப்படுவதால் அதற்கு அவ் வளவு தீவிரசக்தி இல்லையென
(4-ம் பக்கம் பார்க்க)

## 23,126 அகதிகள் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)
கடந்த ஜனவரியிலிருந்து மே மாதம் வரை 23, 1‸6 இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவிலிருந்து இலங் கைக்கு திருப்பியனுப்பப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. (159)

## பணத்தை வைப்பில ஏற்காததால்: மக்கள் வங்கிக்கு எதிராக 19ம்திகதி மறியல்போராட்டம்

(யாழ்ப்பாணம்)
கூட்டுறவுச் சங்கங்களின் பணத்தை மக்கள் வங்கிகள் வைப்பில் ஏற்காததைக்கண் டித்து அடையாள மறியல் போராட்டம் ஒன்றை நடாத் துவதற்கு யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச்சபை தீர்மானித்துள்ளது.

இதற்கான ஆட்சேபனைக் கடிதம் ஒன்றையாழ்ப்பாணம் மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளருக்கு எழுதி யுள்ளதோடு கூட்டுறவுச் சங் கங்களின் பணத்தை வைப் பில் இடுவதற்கு இன்று வெள் ளிக்கிழமை நடவடிக்கை எடுக்காதுபோனால் மேற்படி அடையாள மறியல் போரா
(4-ம் பக்கம் பார்க்க)

காட்டினில் மரங்களை உயர்த்துவோம்
நாட்டினில் மழையினை வீழ்த்துவோம்

## கொள்ளுப்பிட்டி கொள்ளை தொடர்பாக ரிசேர்வ் பொலிஸார் கைது

(கொழும்பு)
கொள்ளுப்பிட்டியிலுள்ள லிபேர்ட்டி பிளாசாவின் கடையொன்றில் கடந்த செவ் வாய்க்கிழமை நடந்த 10 லட
(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு எல்லையில் 19 படையினர் பலி

(மட்டக்களப்பு)
கிழக்கு மாவட்டத்தில் எல் லைக்கிராமத்தில் அமைந் திருந்த பொலிஸ் இராணுவ நிலையங்கள் மீது இனந் தெரியாத ஆயுதக் கோஷ்டியி னர் நேற்று அதிகாலை மேற்
(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த தரமான BigBen, China, மேசை மணிக்கூடுகள், ஐப்பான் சுவர் மணிக்கூடுகள், இருபாலாருக்குமுரிய பலதரப்பட்ட கடிகாரங்கள் சகாய விலையில் விற்பனைக்குண்டு கடிகாரங்கள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும் டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். (சி-6891)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலயியம், சரும நோய்கள், மாதவிடாய்க்கூத்து, இரக்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு மூலவியாதிகள்; மூத்திரரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். (சி-6855)

### இன்று சனிவக்கிர சஞ்சாரம் முடிவு

மகர ராசியில் 4½ மாதச் சனி வக்கிரம் இன்றுடன் (16-10-92) முடிவடைகின்றது. 30-10-92 ராகு, கேது மாற்றமும் 04-11-92 செவ்வாய் மாற்றமும் வெளிவருகின்றது. சோபிதா யாழ்ப்பாணம், நூலாசிரியர் Prof:- சத்தியதாஸன். (சி-6895)

### பரீட்சை

(திருநெல்வேலி)

யாழ்.பல்கலைக்கழக இரண்டாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான பரீட்சைகள் நேற்றுமுன்தினம்புதன்கிழமை முடிவடைந்தன

இதேவேளையில் முதலாம் வருட 1990 — 1991 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான 2-ம் வருட வகுப்புக்கள் நேற்று ஆரம்பமாகியது.

மேலும் முதலாம் வருட பரீட்சை மாணவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வெகுவிரைவில் வெளிவர உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (157)

## சாகித்திய விழா பரிசுத் தேர்வுக்கு நூல்கள் கோரப்படுகின்றன

(கொழும்பு)

இந்து சமய திணைக்களம் 1993ம் ஆண்டு நடைபெற வுள்ள தேசிய சாகித்திய விழா பரிசுத் தேர்வுக்கென நூல்களைக் கோரியுள்ளது.

இந்நூல்கள் 1991 ஜனவரி 1ம் திகதி முதல் டிசம்பர் 31ம் திகதிவரையுள்ள காலப்பகுதியில் வெளியிடப்பட்டவையாக இருக்க வேண்டும்.

நூலாசிரியர் இலங்கையராக இருப்பதுடன் நூல் இலங்கையில் அல்லது இந்தியவில் பிரசுரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சுய முகவரியிடப்பட்ட தபாலுறையை அனுப்பி விண்ணப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கே)

## சைக்கிள் திருட்டு

(கொழும்புத்துறை)

கொக்குவில் மேற்குப் பகுதியில் க. காங்கேசன் என்பவரது வீட்டில் உள்பகுதியில் பூட்டிவிடப்பட்ட சைக்கிள் இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளது.

இத்திருட்டுப்பற்றி தமிழீழ காவல்துறைக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (154)

## இராசி பலன்

16-10-1992

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 30)

பஞ்சமி மு. இ. 11-30 வரை. ரோகிணி பி. ப. 12-37 வரை, மரணயோகம் இராகு காலம் காலை 10 32 முதல் 12 02 வரை. சுபநேரம் காலை 6-02 முதல் 7-32 வரை.

மேடம்: தாழ்ந்த நிலை, மோசம் செய்தல், தொழில் பாதிப்பு.

இடபம்: கௌரவ பதவி, காரிய சித்தி, சுபகாரியம்.

மிதுனம்: வாய்மை தவறுதல், கடும் சினம், மனச்சஞ்சலம்.

கடகம்: பனிப்போர், உறவினர் நன்மை, தாய்ப்பாசம்.

சிங்கம்: வீண்செலவு, சாமர்த்தியம் கடும் உழைப்பு.

கன்னி: நோய் துன்பம், குரோதம், அலைச்சல.

துலாம்: குற்ற உணர்வு, விரோதம், அவமதிப்பு.

விருச்சிகம்: மரியாதை, இலசன மதிப்பு. பணவரவு.

தனுசு: பெரியார் ஆசி, பயணம். நல்வார்த்தை.

மகரம்: அன்னியர் பகை, ஏமாற்றம், வேதனை.

கும்பம்: தொழில் கஷ்டம், குடும்பக் குமுறல், பண முடை.

மீனம்: பொதுப்பணி, தொழில்லாபம், புதிய உறவு.

ஜோஸ்யர்

## ஓராண்டு நிறைவு விழா

(நெல்லியடி)

புலோலிவடமேற்கு. மாலாவதை ''வைதேகி'' பாலர் பாடசாலையின் ஓராண்டு நிறைவுவிழாவும், கலைநிகழ்ச்சிகளும் அண்மையில் நடைபெற்றன.

மாவீரர் ரேசானின் தந்தை நடேசு, மங்கலவிளக்கேற்ற, மாவீரர் வைதேகியின் தாயார் மலர்மாலை சூட்டினார். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (160)

## அகதி முகாமில் தொழுநோய் ஆய்வு

(பண்டத்தரிப்பு)

தீவகமக்கள்இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் முகாம்களில் ஒன்றான கெற்பலி அகதிகள் முகாமில் அண்மையில் தொழுநோய் ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது நாலுபேருக்கு தொழுநோய் தொற்றியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. (72)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் பாடசாலைகளிடையே மாவட்ட மட்டத்தில் ஆரம்பமாகியுள்ள உதைபந்தாட்டப் போட்டியில் இன்று 16 ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆட்டங்களின் விபரம் வருமாறு:

17-வயதுப் பிரிவில் இன்று யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இரு ஆட்டங்களின் முதல் போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை எதிர்த்து புங்குடுதீவு வித்தியாலயமும், 2-வது போட்டியில் புனித ஜோசப் வித்தியாலயத்தை எதிர்த்து மட்டுவில் ஸ்கந்தவரோதயா மோதும்

இன்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் 19 வயதுப் பிரிவுப்போட்டியில் சென் ஹென்றிஸ் கல்லூரியை எதிர்த்து உரும்பிராய் இந்துக் கல்லூரியும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியை எதிர்த்து டிலிபேக் கல்லூரியும் மோதும். (வி)

★

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே நடைபெற்றுவரும் சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விபரம் வருமாறு:

சென். பற்றிக்ஸ் கல்லூரியும் — யாழ்.மத்திய கல்லூரியும் இன்று சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதுகின்றன.

சென்.ஜோன்ஸ் கல்லூரியும் —கொக்குவில் இந்துக்கல்லூரியும் கொக்குவில் இந்துமைதானத்தில் மோதுகின்றன

மேற்படி கல்லூரிகளின் மூன்று பிரிவுகளுக்குமிடையில் நடைபெறும் போட்டிகள் இன்று பிற்பகல் 2-15மணிக்கு ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது. (வி)

## மன்னாரில் புதிய அகதிமுகாம்

(அரியாலை)

மன்னாரில் அகதி முகாம்களில் உள்ள இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக மன்னாரில் புதிய அகதி முகாம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க மடு முகாமிலிருந்துவந்த அகதிகள் பலர் சுண்டு குளி புனித யுவானியார் ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். (59)

## மருந்து தட்டுப்பாடு

(புலோலி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சாதாரண காய்ச்சல், தடிமன் நோய்களுக்குரிய குளிகை மருந்துகள் மாத்திரமன்றி தொற்றுநோய்த் தடுப்பு மருந்து வகைகள், ஏற்பூசி உட்பட பல மருந்து வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (61)

## நூல் வெளியீட்டு விழா

(திருநெல்வேலி)

இயல்வாணனால் எழுதப்பட்ட 'சுவடுகள்' எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெற உள்ளது.

இந்நூலின் வெளியீட்டுரையை விடுதலைப்புலிகளின நிதர்சனப் பொறுப்பாளர் திரு. இ. பரதன் நிகழ்த்துவார். (157)

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க


## இருபாலை தமிழ் மாமன்றம்

நடாத்தும்

## "மொழித்திறன் பரீட்சை"

தமிழ் மொழியில் வளர்ச்சி பெறவும், ஊக்கம் பெறவும் மாணவர்களிடம் இப்பரீட்சை நடாத்தப் படவுள்ளது.

| | | |
|---|---|---|
| மேற் பிரிவு | — 10, 11-ம் ஆண்டு தமிழ் புத்தக பாடத் திட்டம் | |
| மத்திய பிரிவு | — 9, 8-ம் | '' '' '' |
| கீழ்ப் பிரிவு | — 7, 6-ம் | '' '' '' |

மேற்படி பிரிவுகளில் அதற்குரிய பாடத் திட்டத்தை உள்ளடக்கிய பரீட்சை நடைபெறும். இதில் பங்குகொள்ளும் பரீட்சார்த்திகளுக்கு பெறுமதிமிக்க பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இப்பரீட்சையில் தோற்ற விரும்புவோர் அதற்குரிய விண்ணப்பப்படிவத்தை நிரப்பி 23 - 10 - 92ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு

பொதுச் செயலாளர்,
தமிழ் மாமன்றம்,
இருபாலை, கோப்பாய்.

என்ற முகவரிக்கு அனுப்புக.

(சுட்டெண்ணும், பரீட்சை நடைபெறும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும்)

தமிழ் மாமன்ற விண்ணப்பப் படிவம் கிடைக்கும் இடம்:

"பாலாஜி புத்தகசாலை",
(பஸ் நிலையம் முன்பாக),
மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்.

(ஏ-2502)



யாழ்/நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையின் (மங்கையற்கரசி) நிதி உதவிக்காக

இக்கல்லூரி பழைய மாணவர்களால் நடாத்தப்படும்

## கலை விழா

இடம்: கல்லூரி விளையாட்டு மைதானம்
காலம்: 17-10-92 சனி மாலை 5.00 மணி

## ★ இசைமாலை ★

திரு. பொன். சுந்தரலிங்கம்
செல்வி கு. நாகராஜா ஐயர்

இலங்கை வேந்தனின்

## ★ கதகளி பரத நாட்டியம் ★

புலவர் முத்து இராசரத்தினத்தின்

இலங்கை வேந்தன், எல்லாளன், கந்தரோடை இளவரசி, குளக்கோட்டன், ஜய வீரசிங்கையாரியன் (யாழ்ப்பாண மன்னன்), ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன், சங்கிலியன், கண்டியரசன், முதலிய ஈழத்து வரலாற்று நாடக வரிசையில்,

## "பண்டாரவன்னியன்"





இலங்கை வேந்தனின் நடன நாடகத் தோற்றம்

தலைவர்:
திருமதி ச. காங்கேயன்.

காரியதரிசிகள்:
திருமதி அ. தம்பையா,
திரு. கு. சிவகுமார்.

(சி. 6894)

# உலகத் தலைவர்கள் பலருக்கு இலங்கைபிரச்னைபற்றிமகஜர்

(ஜெனிவா)

யூகோஸ்லாவியாவைப் பார்க்கிலும் இலங்கையில் இனப்பிரச்னை மோசமானதாய் இருப்பதாக 'ஜனநாயக மற்றும் அபிவிருத்திச் சேவை' என்ற உலக அமைப்பு சகல நாடுகளினதும் ஜனாதிபதிகளுக்கும் பிரதமர்களுக்கும் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

இலங்கைத் தமிழர்கள் சிங்கள அரசியல் வாதிகளினாலும் குண்டர்களினாலும் பலிக்கடாக்களாக்கப்பட்டு வருகின்றார்கள். இவர்களில் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் இப்படு கொலை நடைபெற்று வருகிறது.

இந்த வன்முறைகளின் விளைவாகவே அப்பாவித் தமிழ் மக்கள் இந்தியாவிற்கு தப்பி ஓடினர். ஆனால் அங்கும் அவர்கள் மீது பல கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்தும் அகதிகள் முகாம்களில் அவர்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதியில் யுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகள் பாரதூரமாக பாதிக்கப்பட்டுள்ளனர். சகலரும் அவஸ்தைப் படுகிறார்கள். சிலர் கொலைப் பட்டிருக்கிறார்கள்.

எனவே இந்த விதமாக அகதிகளை திருப்பி அனுப்புவதை நிறுத்த வேண்டுமென இந்த அமைப்பு இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துமுள்ளது. (சி)

## வீடமைப்பு கடனாக 190 கோடி ரூபாவை இலங்கை வங்கி வழங்கியது

(கொழும்பு)

இலங்கை வங்கி இதுவரை 190 கோடி ரூபாவை வீடமைப்பு கடனாக வழங்கியுள்ளதாக இலங்கை வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் 7 கோடி ரூபாவை குறைந்த வருமானம் உள்ளோருக்கு வீடமைப்பு கடனாக வழங்க தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (கே)

## தபாலக ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை

(திருநெல்வேலி)

வடபகுதி தபாலகங்களில் 1988-89 ம் ஆண்டு தற்காலிக ஊழியர்களாக நியமிக்கப்பட்ட ஊழியர்கள் இன்னமும் நிரந்தரமாக்கப்படவில்லை.

இவர்களை நிரந்தரமாக்குவதற்கு கொழும்பிலுள்ள உயர் அலுவலகம் தமிழ், கணிதம் ஆகிய பிரதான பாடங்கள் உள்ளடங்கலாக 6 பாடங்களில் க. பொ. த. சாதாரண பாட பரீட்சைச் சித்தி இருக்க வேண்டுமென அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

ஆனால் வடபகுதியில் இவ்வாறு தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்களில் பலருக்கு இக் கல்விச் சான்றிதழ் இல்லாமையால் இவர்களதுவேலை பறிபோகக்கூடியதாக உள்ளது.

இச்செய்தியை இலங்கை அரசு சுற்றறிக்கை மூலம் விடுத்துள்ளது. இத்தகைமை உடையவர்கள் வெகுவிரைவில் நிரந்தரமாக்கப்படவுள்ளனர். (57)

## விமானிகள் கோரிக்கை

(புதுடில்லி)

'இந்தியன் எயர் லைன்ஸ்' விமான ஓட்டிகள் சில கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முதல் ''விதி முறைப்படி வேலை'' என்னும் இயக்கத்தில் இறங்கியுள்ளனர்.

இதனையிட்டு இந்திய விமான சேவைகள் பல ரத்துச் செய்யப்பட்டுள்ளன (கே)

# தமிழக முதல்வருக்கு எதிராக விசாரணை நடத்த கோரிக்கை

(புதுடில்லி)

''தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மீது தெரிவிக்கப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க சுப்பிரீம் கோட் நீதிபதி தலைமையிலான விசாரணை குழு ஒன்று அமைக்கப்படவேண்டும்.''

ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி நேற்று புதுடில்லியில் செய்தியாளரிடையே பேசும்போது இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

தமிழக முதல்வர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளைத் தாம் ஆளுநரிடம் சமர்ப்பித்திருப்பதாகவும் அவர் அங்கு கூறினார்.

இதேவேளை ஊழல், நிர்வாக சீர்கேடு, மோசடி போன்ற பல குற்றசாட்டுகளை சுமத்தி ஜெயலலிதா மீது விசாரணை நடாத்த அனுமதிக்க வேண்டுமென்று மகஜர் ஒன்றை தி மு க: தலைவர் திரு. மு. கருணாநிதி தமிழக ஆளுநருக்கும் மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளதும் தெரிந்ததே. (கே-சி)

## தபால் வருகை தாமதம்

# உலக மாநாட்டில் பங்குபற்றும் வாய்ப்பை இழந்த தமிழர்

(யாழ்ப்பாணம்)

கனடா-ரொறன்ரோவில் நடைபெறவுள்ள சூழல் அபிவிருத்தி தொடர்பான கல்வி, தகவல் தொடர்பு உலக மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பை, யாழ்ப்பாணத்திற்கான தபால் விநியோக தாமதத்தால் 'தென கிழக்காசிய சூழல்அபிவிருத்தி' நிறுவனத்தின் தலைவர் டாக்டர் நகுலேஸ் கதிர்காமநாதன் இழந்துள்ளார்.

இம்மாநாட்டில் கலந்து கொள்ள கனடா செல்வதற்காக இவருக்கு வரவேண்டிய போக்குவரத்து ஆவணங்கள் கடந்த வாரம் வந்த குமாரி கப்பலில் வருமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இக் கப்பலில் இந்த ஆவணங்கள் வரவில்லை. இதனால் அவர் இம்மாநாட்டில்கலந்து கொள்ளமுடியாத துரதிர்ஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மேலும் அண்மையில் பிறேசிலின் தலைநரான றியோடி ஜெனீரோவில் நடைபெற்ற 'பூமி உச்சி' மாநாட்டில் 'சர்வதேச பார்வையாளராக' கலந்து கொள்ளுமாறு இவர் அழைக்கப்பட்டிருந்தார்.

எனினும் இவருக்குரிய போக்குவரத்து ஆவணங்கள், மேற்படிமாநாடு நடைபெற்று முடிவடைந்து ஒரு மாதத்தின் பின்பே யாழ்ப்பாணத்தில் இவரது கைக்குக் கிடைத்தது. இதனால் அந்த மாநாட்டிலும் இவர் கலந்து கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## பல்கலைக்கழகத்திற்கு பதிவுசெய்யத் தவறின் புதிய மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திற்கு புதிதாக அனுமதி பெற்றுள்ள மாணவர்கள் தமது பதிவுகளை இம்மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

31-ம் திகதிக்குப்பின் எக்காரணங் கொண்டும் பதிவுகள் ஏற்கப்பட மாட்டாதெனவும் 31-ம் திகதிக்கு முன் பதியாத மாணவர்களின் விபரங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டு புதிய மாணவர்கள் அந்த இடங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படுவரெனவும் அவர் தெரிவித்துள்ளார். (159)

## நோபல் பரிசு

(லண்டன்)

1992ம் ஆண்டிற்கான பௌதிகத்திற்கான நோபல் பரிசு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி ஜோர்ஜ் சர்பாருக்கு வழங்கப்படவுள்ளதாக ஸ்ரொக்ஹோமில் உள்ள சுவீடன் விஞ்ஞான ஆய்வுக் கழகம் நேற்று அறிவித்துள்ளது.

கண்ணுக்குத் தெரியாத அணுத்துகள்களை கம்பியூட்டரின் துணையுடன் கண்டுபிடித்தமைக்காகவே இப்பரிசு அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (க)

# சுயவிருப்பு ஓய்வு 730 தொழில்நுட்ப ஊழியருக்கு சலுகை

(கொழும்பு)

சுயவிருப்பு பேரில் ஓய்வு பெற 730 தொழில் நுட்ப ஊழியர்களுக்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட சுயவிருப்பத்தின்பேரில் ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் மக்கள் மயப்படுத்தப்பட்ட 11 பஸ் டிப்போக்களில் மேலதிகமாக உள்ள 730 தொழில் நுட்ப ஊழியர்களுக்கு இந்த சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெறவிரும்புபவர்களுக்கு 50 மாத சம்பளம் ஓய்வு பெறுவதற்கான ஊக்குவிப்புபணமாக வழங்கப்படவுள்ளன.

## அகதி முகாமில் குழாய்க் கிணறு

(உடுவில்)

நவாலி கிறிஸ்தவ இளைஞர் மன்றத்தினரால் நவாலி மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களின் வசதி கருதி குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (109)

## மாணவர் உணவு முத்திரை

(திருநெல்வேலி)

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இலவச மதிய உணவு முத்திரைகளை மாணவர்கள் அடுத்த மாதம் 5-ம் திகதிக்கு முன்னர் அவ்வப் பகுதி ப. நோ. கூ., சங்கக் கிளைகளில் இருந்து பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது

இதேவேளை மாணவர்களின் மதிய உணவு முத்திரைக்கு அரிசியும், குரக்கன் மாவும் வழங்கப்படவுள்ளன என தெரிவிக்கப்படுகிறது. (157)

## முன்னாள் இஸ்ரேல் பிரதமருக்கு பலஸ்தீனர் கல்வீச்சு

(ரெல்அவிவ்)

முன்னாள் இஸ்ரேல் பிரதமர் இற்ஷாக்ஷமிர் பலஸ்தீன மக்களால் கல்லால் அடிக்கப்பட்டுள்ளதாகவும் ஆயினும் காயம் எதுவுமின்றி அவர் தப்பி விட்டதாகவும் கூறப்படுகிறது.

இஸ்ரேலின் ஆதிக்கத்துக்குட்பட்ட யூதக்குடியேற்றத்தை நேற்று பார்வையிடச் சென்றபோதே மேற்படி கல்வீச்சு சம்பவம் இடம் பெற்றுள்ளதாம். (க)

## நாளை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் நாவண்ணனின் 'கதை — கண்ணீர் — கவிதை' என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பி. ப. 3-30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

ஆசியுரைகளைத் தொடர்ந்து கவிஞர் சோ. பத்மநாதன் கலாநிதி காரை. செ சுந்தரம்பிள்ளை, அருட் கலாநிதி சா. ம. செல்வரெட்ணம் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவர். இறுதியில் நூலாசிரியர் நாவண்ணனின் பதிலுரையும் இடம்பெறும். (சி)

# உகண்டாஜனாதிபதி இந்தியாவிடம் மன்னிப்பு

(புதுடில்லி)

உகண்டாவில் இடிஅமின் ஆட்சிக்காலத்தில், இந்திய மக்கள் துன்புறுத்தப்பட்டதற்கு தான் தற்போது இந்தியாவிடம் மன்னிப்புக்கோருவதாக, இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள உகண்டாவின் தற்போதைய அதிபர் முசேபேனி கூறியுள்ளார்.

1972ம் ஆண்டு உகண்டாவில் இடிஅமின் ஆட்சிக்காலத்தில் பாதிக்கப்பட்ட 28 ஆயிரம் ஆசியப் பிரஜைகளில் இந்திய வர்த்தகர்களே அதிகம் பாதிக்கப்பட்டவர்கள். இவர்களை மீண்டும் உகண்டாவுக்கு வந்து தமது வர்த்தக முதலீடுகளை ஆரம்பிக்கும்படியும், அதிபர் முசேபேனி வேண்டுகோள் விடுத்துள்ளார். (வி)

## 20ம் திகதி மன்னார் புதிய ஆயரின் திருநிலைப்படுத்தும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

மன்னாருக்கு புதிய ஆயராக நியமிக்கப்பட்ட வண இராயப்பு ஜோசப் அடிகளாரின் ஆயராக திருநிலைப்படுத்தும் வைபவம் இம்மாதம் 20-ம் திகதி மடுத்தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

20-ம் திகதி மாலை 5-00 மணிக்கு நடைபெறவிருக்கும் மேற்படி வைபவத்தில் இலங்கையில் உள்ள அனைத்து மாவட்ட ஆயர்களும் பாப்பரசரின் பிரதிநிதியாக இலங்கையில் கடமையாற்றும் ஆயரும் மற்றும் குருமார் அருட் சகோதரிகள் உட்பட பொது மக்களும் கலந்து கொள்ளுகின்றார்கள்.

புதிய ஆயரின் திருநிலைப் படுத்தும் வைபவம் தற்போதைய மன்னார் ஆயராக கடமையாற்றும் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெறும்.

புதிய ஆயராக வண இராயப்பு ஜோசப் திருநிலைப்படுத்தப்பட்டபின்பு இம்மாதம் 27-ம் திகதி மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராகப் பொறுப்பு ஏற்பார். அன்றையத்தினம் இவருக்கு மன்னார் மாவட்டத்தில்பொது வரவேற்பு வைபவமும் நடைபெறும்.

தற்போது மன்னார் மறை மாவட்டத்தில் ஆயராக கடமையாற்றிவரும் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடுத்த மாதம் 5-ம் திகதி யாழ். மறைமாவட்டத்தின் புதிய ஆயர் பதவிகளைப் பொறுப்பேற்பார்.

அன்றைய தினம் யாழ். மரியன்னை பேராலயத்தில் மாலை 4-30 மணிக்கு ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை தலைமையில் பொது வரவேற்பு வைபவம் ஒன்றும் நடைபெறும். (59-வி)

### குண்டசாலையில்
# தமிழில் கற்பதற்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கண்டி குண்டசாலையில் விவசாயப் பாடங்களை தமிழில் கற்பதற்காக மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பாடசாலைக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசித்திகதி அடுத்தமாதம் 11ம் திகதி என்று 18 9 92ம் திகதி வெளியான வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் 2-ம் தர கணக்குப் பதிவாளர்களுக்கான பரீட்சைகளும் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசித்திகதி அடுத்தமாதம் 15-ம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வி)

**நவம்பர் 16**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மான டி. பி. விஜேதுங்கவினால் சமர்ப்பிக்கப்படும் இந்த வரவு-செலவு திட்டத்தில் துண்டுவிழும் தொகையை சமாளிக்கும் விதம் பற்றியும் புதிய யோசனைகளும் அடங்கியிருக்கும்

வரவு-செலவு திட்டம் பற்றிய விவாதம் நவம்பர் 10ம் திகதி எடுத்துக் கொள்ளப்பட்டு இறுதி வாக்கெடுப்பு டிசம்பர் 16ல் இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சே)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளின் ஓவிய சிற்ப கண்காட்சி யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று 16-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கத்தினால் திறந்துவைக்கப்படும்.

**வெளிநாடுகளில்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனவாம்.

குறிப்பிட்ட மாணவர்களின் தேசிய அடையாள அட்டையில் பிறந்த இடம் யாழ்ப்பாணம் என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அந்த மாணவர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறி உதாசீனப்படுத்துவதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை, நவாலி பகுதியிலுள்ள ஆடு, மாடு, கோழி, பன்றிகளை கட்டி வைத்து வளர்க்குமாறு கமநல சேவை நிலையத்தினர் ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (சு)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### மயில்வாகனம் சேதுலிங்கம்
## லெப். நீலன் (சதீஸ்)

(கொக்குத்தொடுவாய் இராணுவத்துடன் நேரடி மோதலில்)

| வீர ஜனனம்: | வீர மரணம்: |
|---|---|
| 13-02-1975 | 16-10-1991 |

வீரம் விளையாடும் வல்வெட்டித்துறை பெற்ற மைந்தா!
தீரம் பல காட்டி எதிரியை நீ திகைக்கவைத்தாய்!
"சேது நான் சாது அல்ல" என்று எதிரிக்கு,
கொக்குத்தொடுவாயில் சீறி நின்ற புலியே நீ!
பயணம் முடியுமுன்னே பாதியிலே சென்றாயோ!
வெள்ளை நிறத்தவனே! வேதனையில் சிரிப்பவனே!
பிஞ்சு முகம்மாறு பஞ்சு மனத்தவனே!
கெஞ்சிக் கேட்டாலும் கிடைப்பாயோ நீயெமக்கு
நெஞ்சை நிமிர்த்தி நாம் நின்று! கதைப்பதற்கு
பிஞ்சு உன்போன்ற பிள்ளைகளின் தியாகமன்றோ!!

இங்ஙனம்:
கொழும்பப்பா, அம்மாச்சி,
அப்பா, அம்மா, அண்ணா,
அத்தான், அக்கா, மருமகன்.

புதுவளவு,
வல்வெட்டித்துறை. (சி 6896)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336 / 81

### தமிழ் அகதிகள் நிலையை
# வெளிநாட்டு தூதுவர்கள் நேரில் ஆராய்வதில் ஆர்வம்

(மட்டக்களப்பு)

தமிழ் அகதிகளுக்கு சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்கள் வழங்கும் நிதியுதவி மற்றும் புனர்வாழ்வு உதவிகளை ஸ்ரீலங்கா அரசு எவ்வாறு கையாளுகின்றது என்பதனை நேரில் அறியுமுகமாக நெதர்லாந்து ஸ்தானிகராலயத்தின் 2-வது செயலர் திரு. கோடி மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளுக்கு விரைவில் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இதேவேளையில் அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் மட்டக்களப்பு, திருமலைப் பகுதிகளில் வாழும் அகதிகள் நிலை, மற்றும் தமிழ் அகதிகள் எவ்வாறு கவனிக்கப்படுகிறார்கள் என்பது குறித்து அகதிகள் புனர்வாழ்வுப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வரும் மட்டக்களப்பு ஆயர் திரு வண சிங்ஸ்லி சுவாம்பிள்ளையை சந்தித்து உரையாடியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# விளையாட்டு அபிவிருத்திக்கு அரசு இருட்டடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களினதும் விளையாட்டு அபிவிருத்திக்கு ஒரு லட்சம் ரூபாவை மட்டுமே விளையாட்டு அமைச்சு இம்முறை ஒதுக்கியுள்ளது

மற்றைய மாவட்டங்களின் விளையாட்டு அபிவிருத்திக்கு கோடிக்கணக்கில் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் மட்டும் 200க்கும் மேற்பட்ட விளையாட்டுக்கழகங்கள் விளையாட்டு அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் உள்ள தற்போதைய சூழ்நிலையில் விளையாட்டின் தரத்தை உயர்த்துவதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றிய கலந்துரையாடல் ஒன்று இம்மாதம் 19-ந் திகதி யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் மேற்படி கலந்துரையாடலில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளார்கள். (வி)

**பொலநறுவையில்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தெரிவித்தார்.

இதேவேளையில் இந்தச் சம்பவத்தில் 173 பேர் கொல்லப்பட்டதாகவும் 400 பேர் வரையில் படுகாயமடைந்ததாகவும் இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

# இலங்கை நிபுணருக்கு அமெரிக்க விருது

(நியூயோர்க்)

இலங்கையரும் பிரபல இருதய நோய் நிபுணருமான டாக்டர் டொனிடொன் மைக்கேல் அமெரிக்காவின் புதிய கண்டுபிடிப்பாளர் நிலையத்தின் விருதினைப்பெற்றுள்ளார்

எய்ட்ஸ் நோய்க்கான முக்கிய தடைமருந்தினை கண்டுபிடித்தமைக்காகவே இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டதாம்.

லொஸ்ஏஞ்சிலில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இவர் கௌரவ தூதுவராக கடமை புரிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

**கொள்ளுப்பிட்டி**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சம் ரூபா கொள்ளை தொடர்பாக றிசேர்வ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

பொலிசார் மேற்கொண்ட உடன் நடவடிக்கையில் கடந்த புதன்கிழமை இவர் கைதானார்.

கொழும்பில் இவ்வாறான கொள்ளைகள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (கே)

**மூன்றரை லட்சம்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சபைக்கும் மகஜரொன்றை அனுப்பிவைத்துவளது.

இம்மகஜரில் கனடாவிலிருந்து ஐம்பதினாயிரம் பேரும், ஐரோப்பாவிலிருந்து ஒரு லட்சம் பேரும், இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் இரண்டு லட்சம் பேருமாக மொத்தம் மூன்றரை லட்சம் பேர் கையொப்பமிட்டுள்ளனர். [159]

**திறைசேரி**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேரி தெரிவித்துள்ளது.

ஆனால் இப்பொழுது 75 கோடி ரூபா மட்டுமே ஆரம்ப நடைமுறைச் செலவுக்குக் கிடைத்துள்ளது.

இதனால் பணச்சந்தையில் பணநிரம்பல் பற்றாக்குறையாக காணப்படுகிறது எனவே இதனை நிவர்த்திசெய்ய இலங்கை மத்திய வங்கி தனது ஆலோசனைகளை வழங்கியுள்ளது. [157]

**பணத்தை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ட்டம் இம்மாதம் 19ம் திகதி பிராந்திய முகாமையாளர் அலுவலகத்துக்கு முன்பு நடாத்தப்படும் என்று கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் தமது வங்கி நடவடிக்கைகளை மக்கள் வங்கிக் கிளைகளிலேயே நடைமுறைப்படுத்திவருகின்றன.

இவ்வங்கியால் வழங்கப்படும் மேலதிகப் பற்று, குறுகிய காலக்கடன், நீண்டகாலக் கடன் ஆகியவற்றை பெற்றும் வருகின்றன. இருந்தபோதிலும் கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெறும் அன்றாட விற்பனைப் பணத்தை வைப்பிலிட வங்கிகள் ஏற்காதபடியால் கடன்களுக்கு சங்கங்களிலிருந்து வட்டி அறவிடுவது சங்கங்களின் செயற்பாட்டை பெரிதும் பாதித்துள்ளது.

பணத்தை வங்கியில் இடுவதை ஏற்காது இருப்பது வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையை மீறும் செயல் என்றும்,

கூட்டுறவுச் சங்கங்களின் பணத்தை வைப்பில் ஏற்க மறுத்த காலப்பகுதிக்கான வட்டியை கழிப்பதற்கும் உடனடியாக கூட்டுறவு சங்கங்களின் பணத்தை வைப்பிலிட நடவடிக்கை எடுக்குமாறும் தமது ஆட்சேபனைக்கடிதத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (சு)

**மன்னாரில் புலிகள்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

11-40 மணியளவில் இத்தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரியவருகின்றது

ரி 56 ரக துப்பாக்கி இதர பல இராணுவ தளபாடங்களும் விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மன்னார் அடம்பன் பாலக்கொடிப் பகுதியில் புதிதாக அமைந்த ஸ்ரீலங்கா இராணுவ தொடர் காவலரணில் இருந்து 500 யார் தொலைவில் இத்திக் கண்டல் என்ற இடத்துக்கு வீதித் தடைகளை அகற்றவந்த 10க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதலைத் தொடுத்தார்கள் என தெரியவருகின்றது.

இத்தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடினர்.

ரி 56 ரக துப்பாக்கி 4, அவைக்குரிய ரவைக் கூடுகள் 16, நடுத்தர ரவைகள் 676, ஜே. ஆர். கைக்குண்டுகள் 2, ஏ. கே. ரவைக் கூடு தாங்கி அணிகள் 4, புகைக்குண்டு 1, இராணுவத் தொப்பிகள் 5 ஆகிய தளபாடங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. (சு)

### நடமாடும்
## சுகாதார சேவை

(தாளையடி)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையினரால் வாரம் ஒருமுறை வடமராட்சி கிழக்குப் பகுதியில் நடாத்தப்பட்டு வரும் நடமாடும் சுகாதார சேவையை இப்பகுதி மக்களின் நலன் கருதி வாரம் இருமுறை நடாத்தும்படி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வடமராட்சி கிழக்கு பிரிவு யாழ்ப்பாணக் கிளையைக் கேட்டுள்ளது. [63]

**அரசியல் தீர்வு**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பி. பி. ஸி. யின் முன்னாள் கொழும்பு முகவர் கிறிஸ் மொறிஸ் தெரிவித்துள்ளார்

ஐரோப்பிய நாடுகளே தற்போது இந்த அழுத்தத்தைக் கொடுத்துவருகின்றன.

இதேவேளையில் டன்நாட்டு நிதியம் இலங்கைக்கு 50கோடி அமெரிக்கடொலர்களைவழங்கியுள்ளதால் இலங்கை அரசு ஒருவருடத்துக்கு அதன் பொருளாதாரத்தை ஓட்டவும், வடக்கு - கிழக்கு யுத்தத்தை நடத்தவும் உதவியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுள்ளது.

**கிழக்கு எல்லையில்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட திடீர் தாக்குதலில் 9 இராணுவத்தினர் 10 பொலிஸார் உட்பட 19 படையினர் கொல்லப்பட்டதாக கேணல் சரத்முனசிங்க தெரிவித்தார்.

இத்தாக்குதலின்போது இவர்களின் ஆயுதங்களும் அபகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இச்சம்பவத்தின்போது இப்பகுதியில் இருந்த படையினரில் பலர் தப்பி ஓடிவிட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (சி)